RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s731

OPEN ACCESS

# சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை எனும் சிறுகதைத் தொகுப்பில் காணலாகும் சமுதாய கருத்துக்கள்

செ. முருகசரஸ்வதி [அ, *]

[அ] தமிழ்த்துறை, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி-627012, தமிழ்நாடு, இந்தியா.

# Social Ideas Found in a Collection of Short Stories, A Green Bird with a Red Neck

C. Murugasaraswathi [a, *]

[a] Department of Tamil, Manonmaniam Sundaranar University, Tirunelveli-627012, Tamil Nadu, India

* Corresponding Author: urekadanish@gmail.com

Received: 12-12-2021
Revised: 19-04-2022
Accepted: 02-05-2022
Published: 29-07-2022

Check for updates

## ABSTRACT

Sivappu Kazhuthudan Oru Pachai Paravai is a collection of short stories by author Ambai. This book covers 11 topics. The first story is Tontai putaitta kakam onru through this story he has told the actions of people. The synopsis of the story is that people are weighed based on the actions of a crow. In the second story 'Sampal melelum nakaram', the author has beautifully described the condition of the people living in the city. The author has beautifully captured the suffering of a city in a hectic situation. In the story viltal, an average mother writes about the son's behavior is not attending the final event of the father as the central theme. Through this story, we can know the situation of the parents and son who went abroad and did not even come to pay the last respect to the father. Through the story of Civappu kaluttutan oru paccai paravai, he expresses the condition of the deaf child. The society aims to address the situation of the parents of a disabled child. Through the story of Poykai, the man's state of mind is conveyed when he becomes a woman. Through this story we can know how the feelings of women are in their minds. Thus, the author has published a comment through each story. In all the stories written by him like 'Vil muriyata ampukal, cinkattin val, payanam 22, payanam 23', the story compares the average human life. The collection of short stories takes each poem to the next move in a realistic language style. All short stories are social ideas and reforming society. The author has made up stories with excellent topics like Cinkattin Val, irattai narkalikal payanam vivarankal.

**Keywords:** Sivappu Kazhuthudan Oru Pachai, Cinkattin Val, Sampal Melelum Nakaram

## முன்னுரை

இந்திய அரசால் ஒவ்வொரு ஆண்டும் தேசிய அளவிலும் மாநில அளவிலும் இலக்கியத்திற்கு வழங்கப்படும் விருது சாகித்ய அகாதமி விருது ஆகும். 1954 முதல் இவ்விருது மத்திய அரசால் வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் 2020 ஆம் ஆண்டிற்கான சாகித்திய அகாதமி விருது பெற்ற நூல் சிவப்பு கழுத்துடன் ஒரு பச்சை பறவை இது ஒரு சிறுகதைத் தொகுப்பு ஆகும். இந்நூல் 11 கதைகளை அடக்கியது. இந்நூலில் வரும் ஒவ்வொரு கதையையும் விவாதிப்பட்டிருக்கிறது.

'சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை' என்ற நூலின் ஆசிரியர் அம்பை. இயற்பெயர் டாக்டர் சி.எஸ். லஷ்மி. வரலாற்று ஆசிரியர். புது தில்லி ஜவர்கலால் நேரு பல்கலைக்கழகத்தில்

முனைவர் பட்டம் பெற்றவர். நாற்பது ஆண்டுகளாகப் பெண்கள் சார்ந்த வாழ்க்கை வரலாற்று ஆய்வை மேற்கொண்டுள்ளார். 'நந்தி மலைச்சாரலிலே' என்ற நூலின் மூலம் எழுத்துலகில் நுழைந்தவர் அம்பை. 1966 முதல் 'அந்திமலை' என்ற பெயரில் இலக்கிய வடிவத்துடன் துவங்கியது இவரது எழுத்தாற்றல். தமிழின் முக்கிய சிறுகதை ஆசிரியராக உருவெடுத்தார். அம்பை தமிழின் நவீன பெண் உலகத்தில் உருவாக்கிய தடம் அழுத்தமானது. தமிழக அரசு பொற்கிழி விருது, பல்கலைக்கழக இலக்கியத் திறன் விருது என பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ளார் (Ambai, 2017). கதை எழுதுவதில் ஆர்வம் மிக்கவர். பல்வேறு சிறுகதை நூல்களை எழுதியுள்ளார் (Ambai, 2021). இவரின் சிறுகதைகள் பல்வேறு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

## தொண்டை புடைத்த காகம் ஒன்று

பெரும் நாசுக்காய் பார்க்கும் காகம் என்ற வசனத்துடன் கதை துவங்குகிறது. காகத்தின் கரைதல் பல மனிதர்களின் செயல்களை பார்ப்பதாக அந்த கதையை நகர்த்துகிறார். காக்காவின் கரைகளில் ஒவ்வொரு மனிதரின் செயல் அடங்கி இருப்பதை அறிய முடிகின்றது. 'ஆரம்பிக்கும்போது கரையத் தொடங்கும் என்று இல்லை என்று கொஞ்ச சிறிது நேரம் சில சமயம் என்று கொப்பளிப்பது போல் என்று மற்றும் சில சமயம் கர்ர் என்று ஒரு நாள் அதன் குரல் ஒலித்தது. தூக்கிவாரிப் போட்டது அவனுக்கு'. இவர் கதையின் ஒவ்வொரு வரிகளும் எதார்த்தமாய் அமைகின்றது. ஒரு காகத்தின் செயல் மனிதனின் செய்தியைக் கதையின் வழியாக ஆசிரியர் கூறியிருப்பது நம்மை ஆச்சரியப்படுத்துகிறது (Ambai, 2021).

## சாம்பல் மேலெழும் நகரம்

நகரத்தின் வாழ்வை பிரதிபலிப்பதாக தன் கதையை அமைத்துள்ளார் அளவிலும் அம்பை. கதை நகரத்தின் பரபரப்பான நிலையில் அடுக்குமாடி குடியிருப்பில் ஒவ்வொரு வீட்டிலும் ஒரு பெரும் இன்பமும் துன்பமும் இருப்பதைக் கட்டுரை வழி அறிய முடிகின்றது. 'ஐந்து மாடிக் கட்டிடங்க வீடுகள் நவீன பாத்ரூம் எல்லாம் ஐந்து நட்சத்திர ஹோட்டலில் இருப்பது மாதிரி இருக்கு. ரொம்ப பெரிய அங்காடி வரப்போகிறது.' இவ்வாறு கதையின் வரிகள் அமைந்துள்ளது. நகரத்தின் பரபரப்புகள், அங்காடிகள், அடுக்குமாடி குடியிருப்புகளின் நிலை, அங்கு நடக்கும் கொலைகள், வன்புணர்வுகள், தொழிலாளர்களின் நிலை, பொருளாதார நிலை என அனைத்தும் இக்கதையின் வழியாக அறிந்து கொள்ள முடிகின்றது (Ambai, 2021). ஒரு நகரத்தில் வாழும் மனிதர்களின் நிலையைப் படம் பிடித்துக் காட்டுவதாக இக்கதை அமைந்துள்ளது.

## வீழ்தல்

பிள்ளைகளை பெற்று செல்லமாக வளர்த்து வெளிநாடு அனுப்பி வைக்கும் பெற்றோர்கள் உண்டு. வெளிநாடு செல்லும் பிள்ளைகள் சிலர் தான் பெற்றோர்களைப் பராமரிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்கின்றனர். பெற்றோர்களின் இறுதிக்கடனைச் செய்ய மனமில்லாத பிள்ளைகளும் இருக்கின்றனர். அவ்வாறு வெளிநாட்டு வாழ்க்கையை விரும்பிய மகன் தந்தை இறந்துவிட அவரது இறுதி சடங்கு கூட செய்ய மனமில்லாமல் இருக்கிறார். வெளிநாடு அனுப்பிய மகன் தனது கணவருக்கு இறுதிக்கடனைக் கூட செய்ய மகன் வரவில்லையே என தாய் வருந்துகிறாள். மகன் வராததை இறுதிச்சடங்கு செய்யாததை நினைத்து தாயின் உள்ளம் தவிக்கிகிறது. 'முழுவதும் சரியாகி விடுவார் என்று அவரிடம் கேட்டால் அதை ஆங்கிலத்தில் எவ்வளவு என்று கேட்டால் டாக்டர் 75 காலாவதியாகும் யோசித்துச் சொல்லுங்கள்'. வெளிநாடு சென்ற பெற்றோர்களின் மனதை காயப்படுத்தும் ஒரு சராசரி மனநிலையும் பெற்றோர்களின் கவலையும் கதை வழியாக அறிந்து கொள்ள முடிகின்றது (Ambai, 2021).

## சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை

தேன்மொழி, காது கேளாத குறைபாடு உள்ளவளாக இக்கதையில் கதாநாயகியாக வலம் வருகிறார். பெற்றோர்களாலும் சமுதாயத்தாலும் காது கேளாதவர் நிலையைக் காண முடிகின்றது ஊனமுற்ற குழந்தைகள் பெற்றோர் பார்க்கும் நிலையும் சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சை பறவை கதை நமக்கு உணர்த்துகிறது. தேன்மொழியின் காது கேட்காத தன்மை இருந்தாலும் அவள் மன ஓட்டத்தை ஆழமாக பதிவு செய்திருக்கிறார் ஆசிரியர் (Ambai, 2019). 'காது கேட்காத குழந்தை ஒலியை எழுப்பும். கட்டாயம் அது கோர்வையாக இருக்காது ரொம்ப உறக்க இருக்கும் ஏன்னா சத்தத்தோட அளவு அதுக்கு கேட்காது அதனாலதான் காஞ்சனாவுக்கு கூட காது கேட்காது என்று தெரிய நாளாயிற்று. எங்களுக்காக அவர் சொல்கிறார் என்று புரிந்தது' என்று தேன்மொழியின் நிலையை அறியமுடிகின்றது (Ambai, 2021). காது கேட்காது தேன்மொழி தன்னை சமுதாயத்தில் எவ்வாறு நிலை நிறுத்திக் கொள்கிறார் அதற்கு பெற்றோர்கள் எவ்வாறு உடந்தையாக அவளுடன் இருக்கின்றனர் என்பதையும் இக்கதை வழியாக அறிந்து கொள்ள முடிகின்றது (Ambai & Prasad, 2021).

## பொய்கை

குளத்தை மையமாக வைத்து இந்த கதையை நகர்த்துகிறார் ஆசிரியர். பெண்ணின் மனநிலையும் அவளது உணர்வுகளையும் அறிய விரும்பிய இளைஞன் ஒருவனை கதாநாயகனாக இக்கதை காட்சிப்படுத்துகிறது. பெண்ணாக மாறும் நிலையை அவன் உணர்கிறான். அவன் உணர்ந்து அதிலிருந்து பெண்களின் மனநிலையை அறிந்து கொள்வதாக இக்கதையின் கரு அமைந்துள்ளது. 'நங்கை தான் அந்த கதைகளை நாடோடி போல் இருந்த கருத்தைக் கூறினார். பெண்ணுடலின் வரையறைகள் பௌதீக ரீதியாக மட்டுமே தீர்க்கமான மனதளவில் அவை ஒன்றில் இன்னொன்று புகும் வகையில் இருப்பவை அவற்றுக்கான இயல்புகள் உலக வாழ்க்கையை ஒட்டியே வந்திருப்பதை பெண்ணாக மாறியதுமே சில இயல்புகள் இருப்பதாக நினைத்து உணர்வது எல்லாமே அந்த உடலை ஒட்டி வைத்திருக்கும் உலக விதிகளை ஏற்பதால் தான் மற்றபடி பின் நான் என்று கோடிட்டு வகுக்க முடியாத ஓடும் நதி போன்றதுதான்'. இவ்வாறு பெண்ணாக மாறிய ஒரு ஆணின் மன உணர்வை பிரதிபலிப்பதாக இக்கதை அமைந்துள்ளது. சமுதாயத்தில் மூன்றாம் பாலினத்தவர் படும் நிலையை இக்கதை வாயிலாக உணர முடிகின்றது. இக்கதாநாயகன் பல்வேறு மன உணர்வுகளை பெறுகிறார் (Ambai, 2021).

## குதிரைக்காரி

திருமணம் செய்துகொள்வதாக ஒரு பெண்ணை ஏமாற்றுகிறான் ஆடவன் ஒருவன். அவன் சொன்ன சொல்லை நம்பி வீட்டை விட்டு வெளியே வந்து இருவரும் திருமணம் செய்து கொள்கின்றனர். நாளடைவில் அவன் கெட்டவன் என தெரியவர அவனிடமிருந்து தப்பிக்க அவனிடமிருந்து தப்பித்து சமுதாயத்தில் போராடும் ஒரு பெண்ணின் நிலையைத் தான் இக்கதையில் உணர்த்தியிருக்கிறார் அம்பை. அவர் சமுதாயத்தில் போராடும் பொழுது ஒரு குதிரை அவள் வாழ்வை திசை மாற்றியதாக எழுதியிருக்கிறார். குதிரையைப் பராமரித்து தனது குழந்தைகளை வளர்க்கும் அந்த துன்பத்தை இக்கதை வழியாக உணர்த்தியுள்ளார். குதிரைகளை விட்டுவிட்டால் என்றார்கள் குதிரை மூத்திரம் போட்டு 'அலசி கருகருவென்று வளரும் முடிகள்'. இவ்வாறு குதிரைத் கதையானது அமைந்துள்ளது. அவள் வாழும் வாழ்வு யதார்த்தமானவை, ஒவ்வொருவருக்குள்ளும் அவள் குதிரை வைத்து வாழ்க்கை நடத்துகிறார் என்பதை அறிய முடிகின்றது. தவறாக ஒருவனை நம்பிய பெண்ணின் வாழ்க்கை ஏற்படும் துன்ப நிகழ்வை அழகாய் எடுத்துரைத்துள்ளார் (Ambai, 2021).

## வில் முறியாத வரங்கள்

இரண்டு குழந்தைகளை பெற்றவள் சாந்தி. பிள்ளைகள் வசதியாய் வாழ்வதற்கு வெளிநாட்டில் படிக்க வைக்கிறாள். வெளிநாடு சென்ற பிள்ளைகள் தாயை மறந்த நிலையில் பணியில் மூழ்கி

விட்டனர். சாந்தியின் கணவன் இறந்து விடுகிறான். தனிமையில் இருக்கிறார். தனக்கான இறுதி துணை வேண்டும் என சாந்தியின் மனது எண்ணம் கொள்கிறது. வெளிநாட்டில் உள்ளது தனது பிள்ளைகளிடம் இதை உணர்த்துகிறார். நேரில் பார்க்க முடியாமல் காணொளியாக தனது பிள்ளைகளை பார்த்து மகிழும மன ஓட்டத்தை உணர முடிகிறது. 'என் வயசு தான் அவங்களோட இது சம்பிரதாய உறவு தான் அவங்களோட நான் ஏன் போகவில்லை இல்லையா அப்ப என்கிட்ட பேசு என்றால் அது சரிவராது நிலை என்று பிள்ளைகள் ஒதுங்கிக் கொள்கின்றனர்' (Ambai, 2021). சாந்தி என் மன ஓட்டத்தை இறுதிக்கால நிகழ்வை படம் பிடிப்பதாக கதையாசிரியர் வடித்துள்ளார்.

## பயணம்

இக்கதையில் மரியாள் என்ற கதாபாத்திரம் வழியாக பெண்களின் பல்வேறு குணநலன்களை உணர்த்தியுள்ளார். பெண்கள் வீட்டிலும் சமுதாயத்திலும் பார்க்கப்படும் நிலையை மரியாளின் வழி காட்டியுள்ளார். 'அய்யன் என்ற கிராமத்தில்தான் ஜனவரி மாதம் பிறந்தால் கிராமத்தில் குழாயில் வரும் தண்ணீர் கிடையாது கழிப்பறையில் தண்ணீர் இருக்காது பிறந்தபோது பனி கொட்டிக் கொண்டிருந்தது பிரசவம் பார்க்கும் மருத்துவச்சி பனிச்சறுக்கு கட்டைகளில் சறுக்கிக் கொண்டு வந்தாலும் அவள் வருவதற்குள் மரியா பிறந்துவிட்டால் வருடம் 1945' என்ற வரிகளின் வழி மரியாவின் பிறப்பை உணர்த்தியிருக்கிறார் (Ambai, 2021). பல நாடுகளுக்கு சுற்றுப்பயணம் செய்யும் அவர் அங்கு காணும் மனிதர்களிடையே பெண்களின் செயல்களை பார்க்கும் விதத்தை பதிவுசெய்கிறார். இவ்வாறு கதையின் ஒவ்வொரு தலைப்புகளும் ஒரு சாதாரண மனித வாழ்க்கையைப் பிரதிபலிக்கிறது.

## முடிவுரை

சமுதாயத்தில் நடக்கும் சராசரி மனித வாழ்க்கையை ஒவ்வொரு கதையும் கண்ணாடியாக காட்டுகின்றது. ஆசிரியர் அம்பை எழுதிய சிறுகதை ஒவ்வொன்றும் முத்தாய் மிளிர்கின்றது. எதார்த்தமான மொழிநடை, புரியும் பேச்சுவழக்கு கதையில் இடம்பெற்றிருப்பதை அறியமுடிகின்றது. நகைச்சுவைக் கூறுகளுடன் சில கதைகளும் நற்கருத்துகளுடன் சில கதைகளும் அமைய சிறுகதைத் தொகுப்பை புனைந்துள்ளார். மனித வாழ்க்கையில் நடக்கும் எதார்த்தத்தை கதைக்குள் வைத்திருப்பது போற்றுதலுக்குரியது. படிக்கும் ஒவ்வொருவரும் சிறுகதை மூலமாக சமுதாய கருத்துகளை அறிய முடியும்.

## References

Ambai, (2017) Ambai Kathaikal (1972-2014), 2nd Ed, Kalachuvadu Pathippagam, Nagercoil, India.

Ambai, (2019) Sivappu Kazhuthudan Oru Pachai Paravai, Kalachuvadu Pathippagam, Nagercoil, India.

Ambai, (2021) Sivappu Kazhuthudan Oru Pachai Paravai, Kalachuvadu Pathippagam, Nagercoil, India.

Ambai, Prasad, G.J.V., (2021) A Red-Necked Green Bird, Simon & Schuster India, Noida, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License